# எஸ்.எஸ்.எம் பொறியியல் கல்லூரி

## தமிழ் மன்றம்

**ஒருங்கிணைப்பாளர் : முனைவர் K சுதா, LIBRARIAN, SSMIET**

### நோக்கம்:

நம் தாய் மொழியின் பெருமையை மாணாக்கர்களிடையே எடுத்துரைப்பதற்கான ஒரு சிறு முயற்சி தான், இந்த "தமிழ் மன்றம்". தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தன் தாய்மொழியின் வேரறிய, நம் முன்னோர் வாழ்ந்த அடையாளங்களைத் தேடிச் செல்லும் ஓர் அற்புதப் பயணம்தான் எங்கள் "தமிழ் மன்றம்". தமிழின் பாரம்பரியம் மற்றும் தமிழரின் கலாச்சாரம் பற்றிய அறிவை மாணாக்கர்களிடையே வளர்க்கவும், தமிழில் தங்கு தடையின்றி பேசுவதை ஊக்குவிக்கவும் பல்வேறுவிதமான வாய்ப்புகளை மாணவ -மாணவியரிடையே ஏற்படுத்தித் தருவதே தமிழ் மன்றத்தின் முதன்மை நோக்கம் ஆகும்.



# உள்ளடக்கம்

| வ. எண் | நிகழ்வுகள் | தேதி |
|---|---|---|
| 1. | தமிழ் மன்றம் துவக்க விழா | 08-09-2014 |
| 2. | பட்டிமன்றம் | 05-02-2015 |
| 3. | ஆசிரியர் தின விழா | 05-09-2015 |
| 4. | பட்டிமன்றம் | 19-03-2016 |
| 5. | பட்டிமன்றம் | 27-07-2017 |
| 6. | ஆசிரியர் தின விழா | 05-09-2017 |
| 7. | கருத்தரங்கம் - சிகரம் தொடலாம் | 11-10-2017 |
| 8. | பட்டிமன்றம் | 17-03-2018 |
| 9. | ஆசிரியர் தின விழா | 05-09-2018 |
| 10. | விவாத மேடை | 05-02-2020 |
| 11. | பேச்சுப்போட்டி | 22-11-2022 |
| 12. | என் இளைஞர் சமூகமே :கவிதை  போட்டி | 16-05-2023 |
| 13. | மாபெரும் தமிழ் கனவு | 18-08-2023 |
| 14. | இளைஞர்களின் எதிர்காலம்- விழிப்புணர்வு நிகழ்ச்சி | 20-02-2024 |
| 15. | பேச்சுப் போட்டி | 11-12-2024 |
| 16. | இன்றைய தலைமுறையினரின் கனவுகள்- விவாத மன்றம் | 12-12-2024 |
| 17. | கவிதை எழுதுதல்  மற்றும் வாசித்தல் | 14-12-2024 |
| 18. | புத்தக தலைப்புகள் குறித்த  நிகழ்ச்சி | 16-12-2024 |
| 19 . | பொது அறிவுப் போட்டி- தமிழ் பழமொழிகள் | 17-12-2024 |

# தமிழ் மன்றம் துவக்க விழா

## 08-09-2014




**சிறப்பு விருந்தினர்: முனைவர் திரு. இளசை சுந்தரம்**

தமிழ் மன்றத் துவக்க விழா **செப்டம்பர் மாதம் 8 ஆம்** தேதி **2014 ஆம் ஆண்டு** நடைபெற்றது. துவக்க விழாவை சிறப்பிக்க நகைச்சுவை மாமன்னர் கலைமாமணி “**முனைவர் திரு இளசை சுந்தரம்**” அவர்கள் வருகை தந்திருந்தார், மேலும் விழாவில் மாணவர்களுக்கான கவிதை போட்டி, கட்டுரை**ப்** போட்டி மற்றும் பேச்சு போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர் பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சுமார் 700 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபெற்றனர்.

# **பட்டிமன்றம்**

**05-02-2015**




சிறப்பு விருந்தினர்: **கவிஞர். மூரா**

தமிழ் மன்றத்தின் சார்பாக **பிப்ரவரி மாதம் 5 ஆம் தேதி 2015 ஆம் ஆண்டு** மாணவர்களுக்கிடையேயான பட்டிமன்றம் நடைபெற்றது. பட்டிமன்றத்தின் தலைப்பானது **"சமூக வலைதளங்களால் நன்மையா தீமையா?"** மாணவர்கள் தங்களது பேச்சு திறமையால் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தனர். பட்டிமன்ற நடுவராக கவிஞர்.மூரா அவர்கள் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தார்.

# <u>ஆசிரியர் தின விழா</u>

## <u>05-09-2015</u>



சிறப்பு விருந்தினர்: **மனிதத்தேனீ திரு. ரா.சொக்கலிங்கம்**

தமிழ் மன்றத்தின் சார்பாக **செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி 2015 ஆம் ஆண்டு** ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக மனிதத்தேனீ திரு. ரா.சொக்கலிங்கம் அவர்கள் பங்குபெற்றார், இவர் தனது நகைச்சுவை உரையின் மூலம் ஆசிரியர்களை ஊக்குவித்து, அனைவரது மனதையும் கவர்ந்தார். ஆசிரியர் தின நினைவாக ஆசிரியர்களுக்கு கல்லூரியின் சார்பாக புத்தகம் வழங்கப்பட்டது.

# பட்டிமன்றம்- 19-03-2016







சிறப்பு விருந்தினர்: **திரு.மதுக்கூர் ராமலிங்கம்**

தமிழ் மன்றத்தின் சார்பாக **மார்ச் மாதம் 19 ஆம் தேதி 2016 ஆம் ஆண்டு** மாணவர்களுக்கிடையேயான பட்டிமன்றம் நடைபெற்றது. பட்டிமன்றத்தின் தலைப்பானது **“இன்றைய கல்விச் சூழல் மாணவர்களுக்கு சுமையா? சுகமா?”.** மாணவர்கள் தங்களது பேச்சு திறமையை பட்டிமன்றத்தின் போது வெளிக்காட்டி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தனர். பட்டிமன்ற நடுவராக **திரு.மதுக்கூர் ராமலிங்கம்** அவர்கள் பங்கேற்றார்.

## பட்டிமன்றம்-27-07-2017

தலைப்பு : Dr. அப்துல்கலாம் அவர்களின் கனவுப்பாதையில் இன்றைய இளைஞர்கள் இருக்கிறார்களா ? இல்லையா ?

**நடுவர் : முனைவர் K. சுதா , Librarian**

| இருக்கிறார்கள் என்ற அணியினர் | இல்லை என்ற அணியினர் |
|---|---|
| K . முத்துராஜ் - EEE | T . பிரசாந்த் -Mechanical |
| S . வேல் முருகன் -Mechanical | C . நந்தகோபால் - Mechanical |
| S . நித்யா - ECE | S . சந்தான கிருஷ்ணன் -Mechanical |






# <u>ஆசிரியர் தின விழா</u>

## <u>05-09-2017</u>

சிறப்பு விருந்தினர்: **திரு.தமிழ் பெரியசாமி ஐயா**

எஸ்.எஸ்.எம். பொறியியல் கல்லூரியில், தமிழ் மன்றத்தின் சார்பாக **செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி 2017 ஆம் ஆண்டு** ஆசிரியர் தின விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தமிழ் செம்மல் **திரு. தமிழ் பெரியசாமி ஐயா அவர்கள்** பங்குபெற்றார், விழாவில் ஆசிரியர்களுக்கான போட்டிகள் நடைபெற்றது, வெற்றி பெற்ற ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



# கருத்தரங்கம் - சிகரம் தொடலாம்

சிறப்பு விருந்தினர்: **முனைவர் திரு. இளசை சுந்தரம்**

**11-10-2017**





தமிழ் மன்றத்தின் சார்பாக **அக்டோபர் மாதம் 11 ஆம் தேதி 2017 ஆம் ஆண்டு,** சிறப்பு கருத்தரங்கம் - **"நீங்களும் சிகரம் தொடலாம்"** என்ற தலைப்பில் நடைபெற்றது**,** சிறப்பு விருந்தினராக **"முனைவர் திரு இளசை சுந்தரம்**" வருகை தந்திருந்தார், இந்நிகழ்ச்சி மாணவர்களை விழித்தெழச் செய்யும் நிகழ்ச்சியாய் அமைத்திருந்தது. நிகழ்ச்சியில் 200 க்கும் மேற்பட்ட மாணவ -மாணவியர் பங்குபெற்றனர்.

# <u>பட்டிமன்றம் – 17-03-2018</u>

தமிழ் மன்றத்தின் சார்பாக நமது கல்லூரியில் 17.03.2018 அன்று மாணாக்கர்களுக்கான பட்டிமன்றம் நடைபெற்றது. இந்த விழாவின் தலைமை விருந்தினராக விஜய் தொலைக்காட்சி புகழ் திரு. ஈ. தினேஷ், அவர்கள் பங்கேற்று, நிகழ்ச்சிக்கு நடுவராக செயல்பட்டு சிறப்பாகவும் நகைச்சுவையாகவும் பேசி அனைவரையும் மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தினார்



# ஆசிரியர் தின விழா- 05-09-2018




தமிழ் மன்றத்தின் சார்பாக, ஆசிரியர் தின விழாவானது 05.09.2018 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. கல்லூரியின் முதல்வர் முனைவர் M.சரவணன் அவர்கள் தலைமையுரையாற்றினார் . வளாக இயக்குனர் முனைவர் R.சந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக GTN கலை கல்லூரி ஆங்கில பேராசிரியர் (ஒய்வு) முனைவர் R மனோகரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சிறப்பு விருந்தினர் பேசுகையில், ஆசிரியர் பணி அறப்பணி என்றும், ஆசிரியராக இருப்பதில் நாம் பெருமிதம் கொள்வோம் என்றும், மேலும் ஆசிரியர் என்பவர் மாணாக்கர்களுக்கு சிறந்த ஆசானாக மட்டுமின்றி உற்ற தோழனாகவும் இருந்து அவர்களை வழிநடத்திச் செல்ல வேண்டும் என்றும், தலை சிறந்த மாணவர்களை உருவாக்குவதே ஓர் ஆசிரியரின் தலையாய கடமை என்றும் ஆணித்தரமாக கூறினார். மேலும் ஆசிரியர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற ஆசிரிய பெருமக்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் மாணாக்கர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.



# விவாத மேடை

தலைப்பு : கல்வி சூழல் -அன்று /இன்று

தேதி : 05-02-2020

ஒருங்கிணைப்பாளர் : முனைவர் K . சுதா (நூலகர் )

உதவி ஒருங்கிணைப்பாளர் : S .தமிழ்வசந்தன் (உதவி பேராசிரியர் )

பங்கேற்பாளர்கள் : SSM கல்லூரி மாணவ -மாணவிகள்











# <u>பேச்சுப்போட்டி 22-11-2022</u>

புத்தகங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காகவும், புத்தகங்கள் வாசிக்கும் திறனை மேம்படுத்துவதற்காகவும், **SSMIET-** தமிழ் மன்றம் சார்பாக மாணாக்கர்களுக்கு, "எனக்கு பிடித்த புத்தகம்" என்ற தலைப்பில் பேச்சுப்போட்டி நடத்தப்பட்டது. இதில் மாணவ மாணவியர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டு, தங்களுக்கு பிடித்த புத்தகங்கள் பற்றி உற்சாகத்துடன் பேசினர். வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.








**தமிழ் மன்றம்**

**தலைப்பு : என் இளைஞர் சமூகமே**

**கவிதை போட்டி 16-05-2023**

**SSMIET** தமிழ் மன்றத்தின் சார்பில் மாணவர்களின் படைப்பாற்றலையும் மொழித் திறமையையும் ஊக்குவிக்கும் வகையில், " **என் இளைஞர் சமூகமே**" என்ற தலைப்பில் ஒரு கவிதை போட்டி 16-05-2023 அன்று நடைபெற்றது. இந்த நிகழ்வு மாணவர்களின் சிந்தனைத்திறனை மேம்படுத்தும் விதமாக போட்டி நடைபெறும் இடத்திலேயே **இடத்திலேயே தலைப்பு கொடுக்கப்பட்டு, 20 நிமிட** நேரத்துக்குள் கவிதை எழுத வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்கள் திறமையை வெளிப்படுத்தினர். மாணவர்கள் எழுதிய கவிதைகள் சமூகத்தை மற்றும் இளைய தலைமுறையின் முக்கியத்துவத்தை அழுத்தமாக எடுத்துக் காட்டின. சிறந்த படைப்புகளுக்கான **முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்கள்** தேர்வு செய்யப்பட்டு, வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

# Winners List

| S.No | Name of the Student | Department | Year | Prize |
|---|---|---|---|---|
| 1. | S.U. முத்து குமரன் | ECE | IV Year | I Prize |
| 2. | K. சிவசங்கரி | ECE | II Year | II Prize |
| 3. | M. சையது முஷாரப் | CSE | II Year | III Prize |

# மாபெரும் தமிழ்க் கனவு-18-08-2023

தமிழ் மொழியின் புகழை உலகெங்கும் பறைசாற்றும் விதமாக, தமிழ் நாடு அரசால், 18-08-2023 அன்று மாபெரும் தமிழ்க் கனவு நிகழ்ச்சியானது திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளுக்காகவும் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 1000 க்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் நம் கல்லூரியின் சார்பாக, நமது கல்லூரியின் தமிழ் மன்ற உறுப்பினர்களான 50 மாணாக்கர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில், சிறந்த கேள்வி கேட்டமைக்கான கேள்வி நாயகன் விருதை, M. சையது முஷாரப் (CSE-IIIYr) பெற்றார். மேலும் தமிழ் பெருமிதம் வாசிப்பு திறன் போட்டியில், சிறந்த வாசிப்பு திறனுக்கான பெருமிதச் செல்வி விருதை K. சிவசங்கரி (ECE-IIIYr) பெற்று நம் கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.



# <u>இளைஞர்களின் எதிர்காலம் – 20.02.2024</u>

சிறப்பு விருந்தினர் : திரு பாரதிகனகராஜ், எழுத்தாளர், நிறுவனர்,
இளங்கோ மன்றம், மணப்பாறை.

நமது கல்லூரியில், தேசிய இளைஞர்கள் தினத்தை முன்னிட்டு இளைஞர்களின் எதிர்காலம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியானது **20-02-2024** அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியை கல்லூரியின் தமிழ் மன்றம் மற்றும் இன்ஸ்டிடியூஷன் இன்னோவேஷன் கவுன்சில் இரண்டும் இணைந்து நடத்தினர். இதில் சிறப்பு விருந்தினராக திரு பாரதி கனகராஜ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இவர் சுதந்திர போராட்டதில் ஈடுபட்ட நம் இளைஞர்களைப் பற்றியும், நமது மூதாதயர்களின் ஆக்கபூர்வமான சிந்தனைகளைப் பற்றியும் உணர்வுபூர்வமாக பேசினார். மாணாக்கர்கள் அனைவரும் இவரது உரையை மிகவும் அமைதியாகவும், ஆர்வமாகவும் கேட்டனர்.

மேலும் மாணவ மாணவிகள் அனைவரும் சிறப்பு விருந்தினருடன் இணைந்து பலவிதமான மரக்கன்றுகளை கல்லூரி வளாகத்தில் நட்டனர். மாணாக்கர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன.

## Clippings







Akkaraippatti
Google
SSMIET, Dindigul - Palani Rd, Anaipatti, Tamil Nadu 624705, India
Anaipatti
Tamil Nadu
India
29°C
84°F
2024-02-20(Tue) 11:11(AM)




SSM


Akkaraippatti
Google
SSMIET, Dindigul - Palani Rd, Anaipatti, Tamil Nadu 624705, India
Anaipatti
Tamil Nadu
India
2024-02-20(Tue) 11:26(AM)
29°C
84°F


Akkaraippatti
Google
SSMIET, Dindigul - Palani Rd, Anaipatti, Tamil Nadu 624705, India
Anaipatti
Tamil Nadu
India
2024-02-20(Tue) 11:27(AM)
29°C
84°F


SSMIET, Dindigul - Palani Rd, Anaipatti, Tamil Nadu 624705, India
Anaipatti
Tamil Nadu
India
2024-02-20(Tue) 10:39(AM)
29°C
84°F




SSMIET, Dindigul - Palani Rd, Anaipatti, Tamil Nadu 624705, India
Anaipatti
Tamil Nadu
India
2024-02-20(Tue) 10:38(AM)
29°C
84°F

# <u>தமிழ் மன்றம்</u>

## பேச்சுப் போட்டி – 11-12-2024

## " உனக்கு பிடித்த எழுத்தாளர் "


எஸ்எஸ்எம் இன்ஜினியரிங் கல்லூரியின் தமிழ் மன்றம் சார்பாக, **உனக்கு பிடித்த எழுத்தாளர்** என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி 11-12-2024 அன்று கல்லூரியின் மாநாட்டு மன்றத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது. இந்த நிகழ்வை நூலகர் மற்றும் தமிழ் மன்றம் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் கே.சுதா அவர்கள் தொகுத்து வழங்கினார்.

இந்த போட்டியின் முதன்மை நோக்கம், மாணவர்களுக்கு இலக்கியம் பற்றிய ஆர்வத்தை ஏற்படுத்தி, அவர்களுக்கு விருப்பமான எழுத்தாளர்களைப் பற்றி உரையாற்றும் வாய்ப்பை வழங்குவதாகும். இப்போட்டியில் தமிழ் மற்றும் ஆங்கில எழுத்தாளர்கள் குறித்து விரிவாக பேசப்பட்டது.

இந்த நிகழ்வின் மூலம், மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தி, எழுத்தாளர்களின் படைப்புகளை ஆய்வு செய்து, திறமையாக தங்களது எண்ணங்களை பகிர்ந்தனர்.

## Clippings









**தமிழ் மன்றம்**

**“இன்றைய தலைமுறையினரின் கனவுகள்”**

**விவாத மன்றம்- 12-12-2024**

தமிழ் மன்றத்தின் சார்பாக, "இன்றைய தலைமுறையினரின் கனவுகள்" என்ற தலைப்பில் ஒரு சிறப்பு விவாத மன்றம் 12-12-2024 அன்று நமது கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வை கல்லூரி நூலகர் மற்றும் தமிழ் மன்ற ஒருங்கிணைப்பாளரான டாக்டர் கே. சுதா அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தினார்.

மாணவர்கள் தங்களது எண்ணங்களை திறமையாக பகிர்ந்து, இன்றைய தலைமுறை எதிர்கொள்ளும் சவால்கள், வாய்ப்புகள் மற்றும் எதிர்கால இலக்குகளைப் பற்றி ஆர்வத்துடன் விவாதத்தில் ஈடுபட்டனர். இந்த நிகழ்வு, மாணவர்களின் தனிப்பட்ட கனவுகள், சமூகப் பொறுப்பு மற்றும் நாட்டிற்கான பங்களிப்புகளை உணர்த்தும் விதமாக அமைந்தது.

**திறமையான கலந்துரையாடல், ஆழமான சிந்தனைகள் மற்றும் நம்பிக்கையுடன் நிகழ்வு வெற்றிகரமாக நிறைவடைந்தது.**



**CLIPPINGS**









# தமிழ் மன்றம்

## கவிதை எழுதுதல் மற்றும் வாசித்தல் போட்டி-14-12-2024

எஸ்எஸ்எம் இன்ஜினியரிங் கல்லூரி தமிழ் மன்றத்தின் சார்பாக, 14-12-2024 அன்று கல்லூரி வளாகத்தில் "கவிதை எழுதுதல் மற்றும் வாசிக்கும் போட்டி" சிறப்பாக நடைபெற்றது.

**நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்:**

இந்த போட்டியின் பிரதான சிறப்பம்சம், கவிதைக்கான தலைப்பு நிகழ்வின் நேரத்திலேயே அறிவிக்கப்பட்டது என்பதுதான். "கலாச்சாரமும் இன்றைய தலைமுறையும் " என்ற தலைப்பில் மாணவர்கள் தங்களது சிந்தனைகளை கவிதையாக வடித்து வாசித்தனர்.

இந்த நிகழ்வு, மாணவர்களின் சிந்தனைக் கூர்மை, மொழி திறமை மற்றும் கவிதை எழுத்து ஆற்றலை வெளிக்கொணர ஒரு சிறந்த மேடையாக அமைந்தது.



**CLIPPINGS**









## தமிழ் மன்றம்

### “புத்தக தலைப்புகள் குறித்த ஐந்து நிமிட நிகழ்ச்சி” -16-12-2024

எஸ்எஸ்எம் இன்ஜினியரிங் கல்லூரி தமிழ் மன்றத்தின் சார்பாக, "புத்தக தலைப்புகள் குறித்த ஐந்து நிமிட நிகழ்ச்சி" என்ற தலைப்பில் ஒரு சிறப்பான நிகழ்வு 16-12-2024 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது

இந்த நிகழ்வின் முக்கிய நோக்கம், மாணவர்களில் வாசிப்புப் பழக்கத்தையும், விமர்சனப்பார்வையையும் ஊக்குவிப்பதாகும். மாணவர்கள் தேர்ந்தெடுத்த புத்தக தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு, ஐந்து நிமிடங்களில் தங்களது அனுபவங்களை மற்றும் கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

விவேகமான சிந்தனை, படைப்பாற்றல் மற்றும் தெளிவான கருத்தரங்கக் காட்சிகள் இந்த நிகழ்வில் காணப்பட்டன. மாணவர்களின் சுதந்திரமான பகிர்வுகள், பிற மாணவர்களுக்கு வாசிப்பின் மீது ஆர்வத்தை வளர்க்கும் விதமாக அமைந்தன.

நிகழ்வு மாணவர்களிடையே வாசிப்பு விழிப்புணர்வையும், உரையாற்றும் திறமையையும் வளர்க்கும் ஒரு சிறந்த முயற்சியாக அமைந்தது.



**CLIPPINGS**









# தமிழ் மன்றம்

## பொது அறிவுப் போட்டி - தமிழ் பழமொழிகள்-17-12-2024

எஸ்எஸ்எம் இன்ஜினியரிங் கல்லூரி தமிழ் மன்றத்தின் சார்பாக, "தமிழ் பழமொழிகளின் பொது அறிவு" என்ற தலைப்பில் ஒரு அறிவுப்பூர்வமான நிகழ்வு 17-12-2024 அன்று கல்லூரி வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின் நோக்கம், மாணவர்களுக்கு தமிழ் பழமொழிகள் குறித்த அறிவையும், புரிதலையும் மேம்படுத்தி, மொழி பயிற்சி மற்றும் பாரம்பரியப் பண்பாட்டு விழிப்புணர்வை வளர்ப்பதாகும்.

மொழி அறிவு, சிந்தனை திறன் மற்றும் கலாச்சார பார்வையை ஊக்குவிக்கும் விதமாக இந்த நிகழ்வு மாணவர்களிடையே சிறந்த வரவேற்பைப் பெற்றது.



**CLIPPINGS**





